**செய்தி வெளியீடு எண்: 677** **நாள்: 23.11.2011**

# செய்தி வெளியீடு

வேளாண்மையை லாபகரமான தொழிலாக மாற்றுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல், தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கிய பல்வேறு வேளாண்மை திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

கரும்பு, இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வேளாண் சார்ந்த தொழில்களுக்கு மூலப் பொருளாக உள்ளது. கரும்பிலிருந்து சர்க்கரை, வெல்லம், மின்சாரம், காகிதம், கால்நடை தீவனம் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. கரும்பின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும், செலவுகளை குறைப்பதன் மூலமும் கரும்பு விவசாயிகள் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்பதை கருத்தில் கொண்டு, ‘நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம்’ என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த புதிய திட்டத்தின் மூலம் குறைந்த அளவு விதை நாற்றுகள் மற்றும் குறைந்த அளவு தண்ணீரை உபயோகித்து சரியான அளவு ஊட்டச் சத்து மற்றும் பயிர் பராமரிப்பின் மூலம் அதிக மகசூல் பெறமுடியும். மேலும், விதைக் கரும்பு தேவையும், தண்ணீர் தேவையும் பெருமளவில் குறையும். எனவே, இந்த ஆண்டு 7500 ஏக்கர் பரப்பில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக ரூ12 கோடியே 93 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இத்திட்டம் நிழல்வலை நாற்று தயாரிப்பு முறை, சொட்டுநீர்ப்பாசனம் மற்றும் கரும்பு விளைச்சலுக்கான ஆதாரம், பயிற்சி, ஆகிய முக்கிய அம்சங்களைக் கொண்டது.

நிழல்வலை நாற்று தயாரிப்பு முறையின் மூலம் (Shade Net Nursery) கரும்பு பயிருக்கான நாற்று உற்பத்தி செய்யப்படும். 7500 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட உள்ள நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்திற்கு தேவைப்படும் கரும்பு நாற்றுகள் 1000 நிழல்வலை நாற்றங்காலில் உற்பத்தி செய்யப்படும். இது கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் செயல்படுத்தப்படும். இதற்காக அரசு 5 கோடி ரூபாய் செலவிடும்.

கரும்பு உற்பத்தியை பெருக்குவதற்கான சொட்டுநீர் பாசன கருவிகளை நிறுவுவதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்படும்.

கரும்பு உற்பத்திக்காக தேவைப்படும் சொட்டுநீர் வழி உரம் மற்றும் கரும்பு வளர்ச்சி ஊக்கிகள் (Sugarcane Booster) வாங்குவதற்காக விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் துல்லிய பாசன முறை மற்றும் நிழல் வலை நாற்றங்கால்களை உருவாக்க தேவையான தொழில் நுட்பம், ஆகியன பற்றி விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் விரிவான பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டம் பற்றிய முழு விவரங்கள், இந்த பயிற்சியின் மூலம் பலனடைந்தவர்களின் கருத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் விவசாயிகளுக்கு புத்தகமாக அச்சிடப்பட்டு வழங்கப்படும்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவுப்படி நடைமுறைப்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம் கரும்பின் நீளம் மற்றும் எடை அதிகரிக்கும். நாற்றுகள் குழித்தட்டுகளில் (Pro-trays) உற்பத்தி செய்யப்படுவதால், இதனை எளிதாக ஒரிடத்தில் உற்பத்தி செய்து பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லலாம். நடவுவயல்கள் அதிக இடைவெளி விட்டு அமைக்கப்படுவதால், ஊடுபயிர் சாகுபடி முறையை எளிதில் கடைபிடிக்க இயலும். விவசாயிகள், குறைந்த அளவு நீரில் அதிக அளவு சாகுபடி செய்ய இத்தொழில்நுட்பம் வழிவகுக்கும். கரும்பு உற்பத்தி அதிகரிப்பின் மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டு, அவர்களின் வாழ்க்கை வளம் பெறுவதற்கும், இது வழிவகுக்கும்.

********

**வெளியீடு :** இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள் : 23.11.2011